

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து பூத் எண் 119. 120.இல் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி எஸ் ராமகிருஷ்ணன் தலைமையில் ஊர்வலமாக சென்று கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வாக்கு சேகரித்தார். உடன் மாவட்ட செயலாளர் க.சுந்தர், நகர செயலாளர் கே.குமார், வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான், பொதுக்குழு உறுப்பினர் டி.பிரேம்சந்த், காஞ்சிபுரம் மாநகர நிர்வாகி வ.ஜெகநாதன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் நூருல் அமீன், வட்டகழக செயலாளர் ரவி, வழக்கறிஞர் ஆர்.கே.தம்பிதுரை, மாநகர வர்த்தக அணி மூர்த்தி, குமரன் எக்ஸ் எம்.சி. உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மதுராந்தகம் தொகுதியில் – என்.ஆர்.இளங்கோ தலைமையில்

கழக வழக்கறிஞர் அணி சார்பில் தேர்தல் பணிமனை - 'வார் ரூம்'!

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்!



மதுராந்தகம்,அக்.5- மதுராந்தகம் தொகுதியில் கழக வேட்பாளர் பரந்தாமன் அவர்களின் தேர்தல் பணிக்காக கழக சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அவர்களின் தலைமையில் கழக வழக்கறிஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பணிமனையை WAR ROOM 30 - 09 - 2026 அன்று கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி அவர்கள் பார்வையிட்டு மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் கழக வழக்கறிஞர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.

கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி, கழக சட்ட துறை முன்னாள் செயலாளர் இரா.கிரிராஜன், கழக வழக்கறிஞர் அணியின் மாநில இணை செயலாளர்கள் பச்சையப்பன்,மருது கணேஷ், கொளத்தூர் சந்துரு, தலைமை கழக வழக்கறிஞர்கள் ரவீந்திரன், கே.ஜே. சரவணன், தேர்தல் பணிமனை(WAR ROOM) பொறுப்பாளர்கள் நன்மாறன், ஆறுமுகம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கனகராஜ், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன், மற்றும் காஞ்சி வடக்கு மற்றும் காஞ்சி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

தங்கள் ஆட்சியில் நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு குரல் கொடுக்காத போது

பெண் உரிமை பற்றிப் பேச உங்களுக்கு தகுதி உண்டா முதல்வரே?

சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை.அக்.5.

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

முதலமைச்சர் விஜய்யின் மதுராந்தகம் ரோடு ஷோ பிளாப்,நம் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தாராபுரம் கூட்டம் டாப் என்று சமூக வலைத்தளங்களில் நிரம்பிக் கிடக்கும் செய்திகளை பார்த்து மனம் நொந்து போன விஜய் பெண்ணை உருவ கேலி செய்வதாக தலைவர் மீது அவதூறு பரப்பி நீலிக் கண்ணீர் வடிக்கும் விஜய் அவர்களே! சொத்தில் பெண்களுக்கு சம உரிமை தந்த கலைஞர் அவர்கள் வழியில் மகளிர் உரிமைத் தொகை,மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை பெண்களுக் காக தந்த தளபதி மு.க.ஸ்டாலினை பற்றி விமர்சிப்பதற்கு 30 ஆண்டுகள் திரைப்படங்களில் பெண்களை "போகப்" பொருளாக சித்தரித்து இரட்டை அர்த்த வசனம் பேசி ஆபாச அங்க அசைவுடன் நடனமாடி ஒரு தலைமுறை இளைஞர்களையே சீரழித்த உங்களுக்கு பெண் உரிமை பற்றி பேச தகுதி உண்டா CMsir?



சட்டப்பேரவையிலும் பொது மேடைகளிலும் மூத்த தலைவர்களை உருவக்கேலி செய்வதையே வாடிக்கையாக கொண்டிருக்கும் நீங்கள் மற்றவர்களை நோக்கி விரல் நீட்டுவதற்கு என்ன தகுதி இருக்கிறது CMsir?

ஆட்சிக்கு வந்த பிறகு பெருகிவரும் பாலியல் வன்கொடுமை பற்றி வாய் பேசாத நீங்கள்,கட்டிய மனைவியை லட்சக்கணக்கான ரசிகர்கள் நாகூசும் வார்த்தைகளால் அர்ச்சித்த போது அதற்கு "Worth இல்லை"என்று பொது வெளியில் சொன்ன நீங்கள் இப்போது பொங்கி எழுவது சாத்தான் வேதம் ஓதுவது போல் இல்லையா CMsir?

டிபன் பாக்ஸில் 5000 ரூபாய் வாக்காளர்களுக்கு கொடுத்தும் தாராபுரம், மதுராந்தகத்தில் த.வெ.க.வுக்கு தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்து நீங்கள் அரசின் திட்டங்களுக்காக மக்களிடமிருந்து பெற்றிருந்த செல்போன் எண்கள் மூலம் பணப்பட்டுவாடா (ஜிபே) செய்வதை மறைக்க நீங்கள் நடத்தும் நாடகம் பலிக்காது CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வேட்பாளர் ஐ.பரந்தாமனை ஆதரித்து மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உதயசூரியன் சின்னத்திற்கு கருங்குழி பேரூர் பகுதியில் உள்ள பல்வேறு பகுதிகளில் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் வாக்குசேகரித்தார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, கருங்குழி பேரூர் சேர்மன் தசரதன் , பொதுக்குழு உறுப்பினர் ஜி.விமல் வர்ஷன், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பொன் விஜயன், பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத், மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்ட நிர்வாகிகள் உள்ளனர்,



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை யொட்டி கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, எலப்பாக்கம் ஊராட்சியில் நெசவாளர்கள் சங்க நிர்வாகிகள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளை முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு தா.மோ. அன்பரசன் ஆகியோர் நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். அருகில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், அறிவழகன் பொன்னிவளவன், கோவிந்தராஜ் முகமதுஅலி ஆகியோர் உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர்கள் தா.மோ. அன்பரசன்- க.சுந்தர் முன்னிலை

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் தீவிர வாக்குச் சேகரிப்பு!

பி.கே.சேகர்பாபு தலைமையில் மேயர் பிரியா ராஜன், மதிமாறன், சைதை சாதிக் – இளம் பேச்சாளர்கள் பிரச்சாரம்!

மதுராந்தகம்,அக்.5- மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 10 பாகங்களில் சூரை குன்னங்குளத்தூர்,வையாவூர் ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 36,9,35 ஆகிய பாகங்களில், 04.10.2026 காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை தீவிர வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சத்தியசாய் நாதன் ஆகியோர் முன்னிலையில் இந்த வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது.

இதில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன்,தமிழன் பிரசன்னா ,மதிமாறன் , சைதை சாதிக், ராஜராஜேஸ்வரி , ஜோதி , வனிதா, ஹிமாவாதி, கிருத்திகா, எழில்துரை , பவித்ரா, ஷரண், கார்த்திக், அழகிரி கருணாநிதி , யாசர், ஜாய், அசோக், ஆகியோர் அந்தந்த பாகங்களில் திரண்டிருந்த பொதுமக்களைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

இந்த வாக்குச் சேகரிப்பில் ப.தாயகம் கவி, கே.எஸ்.ரவிச்சந்திரன் எம் டி ஆர் நாகராஜ், எஸ் ராஜசேகர் எஸ் முரளி,நா.ரஞ்சித் விஜயாலயன், இரா. வீரமணி, லண்டன் க.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட சூரை,வையாவூர், குன்னங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளின் 3 பாகங்களுக்கான பொறுப்பாளர்கள்

எல். பத்தன் அருள்ராஜ், டி.ஜி.எம். பெருமாள், பி. தாண்டவராயன், பி. பார்த்திபன்

சத்தியராஜ் ஜெயபால் விஜயகுமார் உதயகுமார் ராஜேந்திரன் ஆர் வாசுதேவன் து. கணேசன் வேலு சக்கரபாணி முத்து எம் எஸ் ஆறுமுகம் இ. தினேஷ் கே மணிகண்டன் ,எம் எச் காமராஜ் சி. வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

இப்பிரச்சாரத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய திமுக முன்னாள் அமைச்சர் சேகர்பாபு, தமிழில் ஒரு பழமொழி சொல்வார்கள். காளி பெருங்காய டப்பா வெறும் வாசனைக்கு தான் உதவும். சமைப்பதற்கு உதவாது என்று. அது போல தான் இந்த முதல்வர் போலியான முகம் கொண்ட, பொய்யான முகமூடி போட்ட முகம் கொண்ட முதலமைச்சர் என்பது இந்த இரண்டு இடைத்தேர்தலில் தெளிவாகிவிட்டது.

ஐந்து நிமிடங்கள் பேசினாலே எங்களை வெல்வதற்கு ஆள் என்று அரைகுவல் விடுத்தவர் ஏன் இன்று தெருத்தெருவாக சுற்றிக் கொண்டிருக்கிறார். இதற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தான். இதை உருவாக்கியவர் தீர்க்கதரிசி எங்களுடைய திமுக தலைவர் என்றார்.

இரண்டு இடைத்தேர்தலுக்கு தெரு தெருவாக சுற்றிக.கொண்டு இருப்பவர் இந்த இடைத்தேர்தலுக்கு பிறகு வேறு வழியில் அவர் சுற்றிக்கொண்டு திரிவார்.

மதுராந்தகம் தொகுதியில் தவெக வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருக்கக் கூடிய இரண்டு முகங்களுக்கு சொந்தக்காரனான மரகதம் குமரவேல் மீது அடுக்கடுக்கான புகார்களை இப்பகுதி மக்கள் சொல்கிறார்கள்.

இம்மக்களின் பிரச்சினைக்காக தொடர்ந்து தீமுக செயல்படும் தேவைப்பாட்டால் மக்களை ஒன்று திரட்டியும் போராடும், நீதிமன்றத்திற்கு சென்று தீர்ப்போம் என்று உண்மையோடு நாங்கள் மக்களோடு பிரச்சாரத்தை தொடங்கி இருக்கிறோம்.

ஐந்து கோடு கோடி மக்களுக்கு தீர்வு காணக்கூடிய தேர்தலாக தாராபுரம் மதுராந்தகம் தொகுதி இடைத் தேர்தல் அமைந்திருக்கிறது. ஆகவே சூரியனை மக்கள் தேர்ந்தெடுத்து விட்டார்கள். ஒரு அமைதி புரட்சி ஆறாம் தேதி நடைபெறும் என்பதை உறுதியாக நம்புகிறேன் என்று சேகர்பாபு தெரிவித்தார்.





மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனுக்கு சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதிக்கு ஒதுக்கப்பட்ட அச்சரபாக்கம் ஒன்றியம், கரிகிலி உராட்சியில், நே.சிற்றரசு, ஏ.ஆர்.பி.எம். காமராஜ் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி கிளை செயலாளர் மாணிக்கம் தலைமையில், மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என். துரை உள்ளிட்டோர் வாக்கு சேகரித்தனர். உடன் மாநில மீனவர் அணி துணை செயலாளர் வி.பி.பொன்னரசு, வட்ட செயலாளர்கள். லைனர்.கே.பிரபு, ஜெ.விஜயகுமார், கே.ஜி. செந்தில்குமார், எஸ்.சசிகுமார், ம.தயாநிதி, மாவட்ட பிரதிநிதிகள் ஏ.பி.வேலு, ஆர்.சசிகுமார், கு.சரவணன், ஆர்.ரஞ்சித்குமார், ச.ரமேஷ், மு.ஜோதிஸ்வரன் ஆகியோர் இருந்தனர்.